# கற்றல் விளைவு / திறன் வழி மதிப்பீட்டுத் தேர்வு

**வகுப்பு : ஒன்பது** **மாணவர் பெயர் ____________________**

**EMIS ____________________** **மதிப்பெண்கள்: 25**

**மொழி : தமிழ் வழி** **நேரம்: 40 நிமிடங்கள்**

**கீழ்க்காணும் பத்தியினைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யா செந்நா", பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான். மெய் பேசும் நா, மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் 'பொய்மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்மையைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைப்பெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது என்பது பல இலக்கியங்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

**வினாக்கள்:**

1. **வாய்மை குறித்து நற்றிணை குறிப்பிடுவது யாது?**

   அ. பொய்படுபறியா வயங்கு செந்நா ஆ. பொய்யா செந்நா
   இ. பொய்மொழிக் கொடுஞ்சொல் ஈ. பிழையா நன்மொழி

2. **வாய்மையுடன் தொடர்புடைய கருத்தினைத் தேர்ந்தெடு.**

   அ. நண்பர் தவறு செய்யும்பொது இடித்துரைத்தல்.
   ஆ. அனைவரிடமும் இன்பம் தரக்கூடிய இனிய சொற்களைப் பேசுதல்.'
   இ. பிறர் நன்மைக்கு பொய் கூறுவதும் உண்மையென உலகம் ஏற்கும்.
   ஈ. கண்ட இடத்தில் ஒன்றும், காணாத இடத்தில் வேறொன்றும் உரைப்பது உண்மை.

3. **அரிச்சந்திரனும், காந்தியும் உலகத்தார் உள்ளங்களில் இன்றளவும் நிலைத்து நிற்க காரணம்?**

   அ. அனைத்து உயிர்களையும் தன்னுயிராய் நினைப்பதால்.
   ஆ. தனிமனித ஒழுக்கம் நிறைந்திருப்பதால்.
   இ. எச்சூழ்நிலையிலும் மெய்மை நிலையில் மாறாதிருப்பதால்.
   ஈ. சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்வதால்.

4. **'சத்யமேவ ஜெயதே' – இச்சொல்லை நாம் நீதிமன்றம் மற்றும் காவல் நிலையத்தில் காண்கிறோம். இச்சொல்லுக்கான பொருள் என்ன?**

   அ. கடமையைச் செய் ஆ. நன்மொழி பேசு
   இ. வாய்மையே வெல்லும் ஈ. சத்தியம் பேணு

5. **சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.**

**கூற்று** : 1. உள்ளத்தில் உள்ளது மாறாமல் அதனை வாய் வழியாகப் பேசுவது வாய்மை எனப்படும்.

**கூற்று** : 2. ஒரு மனிதனை இந்த சமுதாயம் போற்றுவதும் தூற்றுவதும் அவரது வாய்மையாலேயே.

**கூற்று** : 3. உண்மையை நாம் அறிவினால் மட்டும் காண்பதில்லை; கொடுஞ்சொல் மூலமும் காண்கிறோம்.

அ. கூற்று 1 சரி ஆ. கூற்று 1, 2 சரி

இ. கூற்று 2, 3 சரி ஈ. கூற்று 1, 3 சரி

## English

**Read the following passages and answer the questions based on your understanding:**

One sunny morning, a young girl named Lily decided to explore a forest called the Enchanted Forest. She walked along a narrow path, surrounded by the soothing sounds of chirping birds and rustling leaves. As she walked deeper into the forest, the air became cooler and the sunlight filtered through the leaves, creating a mesmerising pattern on the ground. Lily spotted a family of deer grazing peacefully in a meadow. She watched in awe as a playful squirrel chased its tail up a tree. Further along the path, she discovered a clear, babbling brook. The water was so clear that she could see the colourful pebbles at the bottom.

As she continued her journey, Lily came across a stunning waterfall. The water tumbled down from a great height, creating a gentle mist that cooled the air. Nearby, a group of butterflies danced around a cluster of wildflowers, their vibrant colours adding to the enchantment of the place. Lily sat down by the waterfall, feeling the cool mist on her skin. She took a deep breath, inhaling the fresh, earthy scent of the forest. She closed her eyes and listened to the symphony of nature around her – the chirping of birds, the rustling of leaves, and the soothing rush of water.

Time seemed to stand still as Lily immersed herself in the beauty of the Enchanted Forest. She felt a deep connection to nature and realized how important it was to preserve such magical places. With a grateful heart, Lily left the forest, carrying the memory of its beauty with her forever.

**Questions:**

1. **What inspired Lily to explore the Enchanted Forest?**
   a. A cloudy afternoon b. A sunny morning
   c. A rainy day d. A moonlit night

2. **What did Lily see the family of deer doing in the meadow?**
   a. Grazing peacefully b. Napping under a tree
   c. Chasing each other d. Climbing a tree

3. **What did the butterflies add to the place near the waterfall?**
   a. A sense of mystery b. A feeling of danger
   c. A sombre atmosphere d. Vibrant colours and enchantment

4. **What did Lily feel on her skin as she sat by the waterfall?**
   a. Warm sunlight b. Cool mist
   c. Raindrops d. Breezy wind

30042024

5. **What realization did Lily have during her time in the Enchanted Forest?**

a. She wanted to build a house there.
b. She should never visit the forest again.
c. She wanted to bring her friends to the forest.
d. Nature should be preserved and protected.


**MATHS**

1. **கீழ்க்காணும் அட்டவணையில் மனோகர் ஒரு செடியின் சராசரி வளர்ச்சியினைக் குறித்துள்ளார். எந்த வாரத்தில் அச்செடியானது அதிக வளர்ச்சி அடைந்துள்ளதாக மனோகர் கண்டறிந்துள்ளார்?**

| வாரம் | முதல் வாரம் | இரண்டாம் வாரம் | மூன்றாம் வாரம் | நான்காம் வாரம் |
|---|---|---|---|---|
| சராசரி வளர்ச்சி (செ.மீ) | $\frac{4}{7}$ | $\frac{5}{8}$ | $\frac{3}{5}$ | $\frac{1}{2}$ |

a. முதல் வாரம்
b. இரண்டாம் வாரம்
c. மூன்றாம் வாரம்
d. நான்காம் வாரம்

2. **கீழ்க்காணும் படத்தில் எந்தக் கோட்டுத்துண்டின் நீளம் $\sqrt{8}$ அலகுகள் ஆகும்?**




a. AB b. CD c. EF d.GH

3. **பின்வருவனவற்றுள் $(4)^{\frac{3}{2}}$ க்குச் சமமானது எது?**

a. 2 b. 8 c. 16 d. 32

4. **பின்வரும் கூற்றுகளில் சரியான ஒன்றினைத் தெரிவு செய்க.**

கூற்று 1: $r = \sqrt[n]{x^m} \Rightarrow r^n = x^m$
கூற்று 2: $r = \sqrt[n]{x^m} \Rightarrow r^{\frac{1}{m}} = x^{\frac{1}{n}}$

a. கூற்று 1 மட்டும் சரி
b. கூற்று 2 மட்டும் சரி
c. இரு கூற்றுக்களும் சரி
d. இரு கூற்றுக்களும் தவறு

5. $\frac{\sqrt{5}-2}{\sqrt{5}+2}$ = a $\sqrt{5}$ + b எனில் a மற்றும் b இன் மதிப்பு _________, _________

a. a = 4, b = 9 b. a = −4, b = 9

c. a = −4, b = −9 d. a= 4, b = − 9

## SCIENCE


1. **கவிதா, அருகில் உள்ள பூங்காவில் 2 மீ ஆரமுள்ள வட்ட வடிவ பாதையில் நடைப்பயிற்சி மேற்கொள்கிறாள். கவிதா கடந்த தொலைவு 44 மீ மற்றும் இடப்பெயர்ச்சி 4 மீ ஆக இருக்கும்போது நடைப்பயிற்சியை நிறுத்தி விடுகிறாள் எனில் கவிதா எத்தனை சுற்று சுற்றியிருப்பாள்.**


a. 2 சுற்று b. 3 சுற்று c. 3.5 சுற்று d. 2.5 சுற்று


2. **X, Y எனும் 2 தனிமங்களில், X ன் L கூட்டில் 7 எலக்ட்ரான்களும் Y ன் M கூட்டில் 7 எலக்ட்ரான்களும் உள்ளன எனில் X,Y முறையே _______.**


a. X – ஃபுளூரின் Y – குளோரின் b. X – ஃபுளூரின் Y – ஆர்கான்
c. X – ஆர்கான் Y – குளோரின் d. X – ஆர்கான் Y – ஃபுளூரின்

3. **பின்வருவனவற்றில் பொட்டாசியம் அயனியின் எலக்ட்ரான் அமைப்பைக் காட்டும் படம் எது?**


a. 



b. 



c. 



d. 


4. **கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத ஒன்றினைத் தேர்ந்தெடு:**

a. 

b. 

c. 

d. 

5. **செல்கள் புதுப்பிக்க எடுத்துக்கொள்ளும் காலத்தை சரியாக பொருத்தவும்.**

1. தோல் செல் – அ. ஒவ்வொரு 10 வருடங்கள்
2. எலும்பு செல்கள் – ஆ. ஒவ்வொரு 2 வாரங்கள்
3. கல்லீரல் செல்கள் – இ. 120 நாட்கள்
4. இரத்த சிவப்பு செல்கள் – ஈ. ஒவ்வொரு 300 – 500 நாட்கள்

a. 1 –ஆ, 2 – அ, 3 –ஈ, 4 – இ b. 1 –இ, 2 – அ, 3 –ஈ, 4 – ஆ

c. 1 –ஈ, 2 – ஆ, 3 –அ, 4 – இ d. 1 –ஈ, 2 – இ, 3 –ஆ, 4 – அ

## SOCIAL SCIENCE

1. **உங்கள் வீட்டிற்கு உழைப்பாளர் குழு கணக்கெடுப்பிற்கு வந்தவர் மொத்தம் 2 எனக் கணக்கிடக் காரணம் எது?**

   a. 12 வயதுக்கு மேற்பட்டவர் 2 பேர் இருந்ததால்.
   b. 65 வயதுக்கு மேற்பட்டவர் 2 பேர் இருந்ததால்.
   c. 15 வயது முதல் 60 வரை 2 பேர் இருந்ததால்.
   d. 12 முதல் 65 வயது வரை 2 பேர் இருந்ததால்.

2. **60 வயதுக்கு மேற்பட்டோர் உழைப்பாளர் குழுவில் இருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர் எனில், ஒரு நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்டோர் அதிகம் இருந்தால், கீழ்காண்பவைகளுள் சாத்தியமான விளைவுகளுல் சரியானவற்றைக் கண்டறிக:**

   i. நாட்டின் மொத்தப் பொருளாதார உற்பத்தி குறையும்.

   ii. உழைப்பாளர் குழுவின் எண்ணிக்கைக் குறையும்.

   iii. பராமரிக்க வேண்டியோர் எண்ணிக்கைக் குறையும்.

   iv. நாட்டின் முன்னேற்றம், வளர்ச்சி மெதுவாகும்.

   a. i, ii மற்றும் iii சரி.

   b. ii, iii மற்றும் iv சரி.

   c. i, iii மற்றும் iv சரி.

   d. i, ii மற்றும் iv சரி.

3. **கொடுக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் கீழ் காணும் கூற்றுகளில் சரியானவைகளைக் கண்டறிக:**

வேலைவாய்ப்பு விவரங்கள் (துறை வாரியாக) 1972–2012 (சதவிகிதத்தில்)

| துறைகள் | 1972- 1973 | 1983 | 1993-1994 | 1999-2000 | 2011-2012 |
|---|---|---|---|---|---|
| முதன்மைத் துறை | 74.3 | 68.6 | 64 | 60.4 | 48.9 |
| இரண்டாம் துறை | 10.9 | 11.5 | 16 | 15.8 | 24.3 |
| சேவைத் துறை | 14.8 | 16.9 | 20 | 23.8 | 26.8 |

   i. முதன்மைத் துறையில் நிகழ்ந்து வரும் கணிசமான சரிவைக் காட்டுகிறது.

   ii. 1972 முதல் 2012 வரை இரண்டாம் துறையின் கணிசமான முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

   iii. 1972 முதல் 2000 வரை சேவைத் துறையின் கணிசமான வீழ்ச்சியைக் காட்டுகிறது.

   iv. முதன்மைத் துறையே நாட்டின் சிறப்பான எதிர்காலம் எனக் காட்டுகிறது.

   a. i மற்றும் iii சரி.   b. i மற்றும் ii சரி.

   c. i மற்றும் iv சரி.   d. ii மற்றும் iv சரி.

4. **இந்தியா ஒரு வேளாண் நாடாகும். எனினும், இந்தியாவின் வேலைவாய்ப்பு நிலை விவரங்களின் அடிப்படையில், 1972–73 ல் முதன்மைத் துறை 74% ஆக இருந்து 2011–2012 ல் 50% ஆகக் குறைந்துள்ளது. முதன்மைத் துறையின் வீழ்ச்சிக்கு சாத்தியமான காரணங்களைக் கண்டறிக:**

i) நிச்சயமற்ற பருவமழை மற்றும் மோசமான நீர்ப்பாசன வசதிகள் குறைபாடுகள் உள்ளது.

ii) நிரந்தர வருமானத்திற்காக மக்கள் சாதாரண கூலி வேலைக்கு மாறியுள்ளனர்.

iii) அரசாங்கம் சிறப்புக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வகுத்து செயல்படுத்துகிறது.

iv) முதன்மைத் துறைகள் இலாப நோக்கமற்ற மற்றும் முறைசாரா நிறுவனங்களாகும்.

a. i, ii மற்றும் iii சரி    b. ii, iii மற்றும் iv சரி.

c. i, iii மற்றும் iv சரி.    d. i, ii மற்றும் iv சரி.

5. **நம் முன்னோர்களில் 90% முதன்மை தொழில்களில் ஒன்றை செய்து வந்திருக்கின்றனர். ஒரு வகுப்பறையில் உள்ள மாணவர்களில் 90% பேர் எதிர்காலத்தில் சேவைத்துறையில் ஈடுபட விரும்புவதாகக் கூறுகின்றனர்.**

**இந்த மாற்றம் ஏற்படுத்தக்கூடியத் தாக்கங்களில் பொருந்தும் கூற்றுகளைக் கண்டறிக?**

i. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதன்மைத் துறையின் பங்குக் குறையும்.

ii. உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்பதில் வீழ்ச்சி ஏற்படும்.

iii. மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு ஏற்படும்.

iv. இரண்டாம்துறை உற்பத்தி பெருகி, ஏற்றுமதி அதிகரிக்கும்

a. i, ii மற்றும் iii சரி    b. ii, iii மற்றும் iv சரி.

c. i, iii மற்றும் iv சரி.    d. i, ii மற்றும் iv சரி.

33042004